# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 40/2019

| | | |
|---|---|---|
| Name | : திரு.தீபக் | Rw2 |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of April 2026.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 6 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) TN-76-L-1229 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ் பாலிசி நகலும் அதன் விதிகள் மற்றும் நிபந்தனைகள் எ.ம.சா.ஆ- 2 ஆகும். 2) குற்ற இறுதி அறிக்கையின் நகல் எ.ம.சா.ஆ. 3 ஆகும்.

3) 1ம் எதிர்மனுதாரருக்கு காப்பீட்டு காக வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் நகலும், அஞ்சலக ரசிதும் எ.ம.சா.ஆ– 4 ஆகும். 4) 1ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ. 5 ஆகும். 5) 2ம் எதிர்மனுதாரருக்கு காப்பீட்டு காக வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் நகலும், அஞ்சலக ரசிதும் எ.ம.சா.ஆ– 6 ஆகும். மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன். 6) 2ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ. 7 ஆகும். மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சமயத்தில் விபத்துக்குள்ளான வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில்தான் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்துக்குள்ளான வாகனத்திற்க்கு விபத்து சமயத்தில் முழுமையான காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என காவல் துறை ஆவணங்களின் அடிப்படையில் கட்சி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதை உறுதி செய்ய காவல் துறை அதிகாரிகள் என்ன வகையான நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். இழப்பீடு கொடுப்பதை தவிர்ப்பதற்காக நான் தவறான சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi